## 17. WATER SUPPLY

**17.5 ஊராட்சிகளில் ஆண்டு பராமரிப்பு செலவினை உயர்த்துதல்–கைப்பம்பு ஆண்டு பராமரிப்புச் செலவினம் ரூ.600/– ஆகவும், விசைப்பம்பு ஆண்டு பராமரிப்புச் செலவினம் ரூ.7,500/– ஆகவும் உயர்த்துதல்**

---

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் (சி2) துறை

அரசாணை (நிலை) எண். 63 நாள் : 29.06.2006

படிக்க :

1. அரசாணை நிலை எண்.84, ஊரக வளர்ச்சித் துறை, நாள்.5.5.1998.
2. இயக்குநர், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை கடித நக.எண்.41862/2001/குவ நாள்.13.06.2001.

**ஆணை**

படிக்கப்பட்ட அரசாணையில் ஊராட்சிகளில் இயங்கும் கைப்பம்பு ஆண்டு பராமரிப்பு செலவு ரூ.300 எனவும், விசைப்பம்பு ஆண்டு பராமரிப்பு செலவு ரூ.7000 எனவும் நிர்ணயித்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. இரண்டாவது மாநில நிதிக்குழு கிராம ஊராட்சிகளில் கைப்பம்பு, ஆண்டு பராமரிப்பு செலவினை ரூ.300 –லிருந்து ரூ.600 ஆக உயர்த்தலாம் எனவும் விசைப்பம்பு ஆண்டு பராமரிப்பு செலவினை ரூபாய் 7000 –லிருந்து ரூபாய் 7500 ஆக உயர்த்தலாம் எனவும் பரிந்துரை செய்துள்ளது. மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி ஊராட்சிகளில் இயக்கப்படும் கைப்பம்பு ஆண்டு பராமரிப்பு செலவினை ரூ.300 லிருந்து ரூ.600 ஆகவும், விசைப்பம்பு ஆண்டு பராமரிப்பு செலவினை ரூ. 7000–லிருந்து ரூ.7500 ஆகவும் உயர்த்தி தருமாறு வேண்டி இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநரின் வேண்டுகோளை ஏற்று ஊராட்சிகளில் இயக்கப்படும் கைப்பம்பு ஆண்டு பராமரிப்பு செலவினை ரூ.300–லிருந்து ரூ.600 ஆகவும், விசைப்பம்பு ஆண்டு பராமரிப்பு செலவினை ரூ.7000–லிருந்து ரூ.7500 ஆகவும் உயர்த்தி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் குறிப்பிடப்பட்டுள்ள கைப்பம்பு மற்றும் ஆண்டு பராமரிப்பு செலவினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களே தமது சொந்த வருவாய், நிதி ஆதாரங்களிலிருந்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

5. இவ்வாணை நிதித்துறை அசாகு.எண்.6446/ஆர்டி/2006, நாள்.21.3.2006ல் தெரிவித்துள்ள ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்